சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS No**: 05/2009

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 நாள் **Dw**2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 05.08.2025

**Dw**2 ( வெங்கடேசலு)

**குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)**

நான் கட்டிடங்கள் கட்டும் தொழில் செய்து வருகிறேன். நான் பெருந்துறை, ஈரோட்டில் தொழில் செய்து வருகிறேன். வழக்கில் எனக்கு அழைப்பாணை வரவில்லை. நான் 1 ம் பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன். 1 ம் பிரதிவாதி எனது பாலிய நண்பர், 55 ஆண்டுகளாக தெரியும். தாவாவை சுப்பிரமணியம் தாக்கல் செய்துள்ளார். பணம் ரூ.50000/- வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன ஆவணம் பதிவு செய்துள்ளார் என்றால் இடத்தை வைத்து பணம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த ஆவணத்தை நான் பார்த்ததில்லை, 1 ம் பிரதிவாதி சொல்லியுள்ளார். 1 ம் பிரதிவாதி சொன்னதன் அடிப்படையில் தான் ஆவணம் பற்றி தெரியும், நேரில் எனக்கு தெரியாது. ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்பதை 1 ம் பிரதிவாதி சொல்லி தான் தெரியும். பணம் கொடுத்தது வாங்கியது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்ன வகையான ஆவணம் , அந்த ஆவணத்தின் சரத்துக்கள் என்ன என்று எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தில் அவருக்கு பாத்தியம் உள்ளது. அந்த சொத்தில் அவருக்கு 1/7 பங்கு பாத்தியம் என்றால் சரிதான். அந்த சொதது அவருக்கு அவரின் தகப்பனாரிடமிருந்து வந்தது. அந்த சொத்தின் ஆவணம் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. மொத்தம் ஏக்கர் 1.75 உள்ளது. விவசாய பூமியா

என்றால் விவசாய பூமியும் உள்ளது, கட்டிடமும் உள்ளது. கட்டிடத்தின் கதவு எண் தெரியாது. இரண்டு வீடுகள் உள்ளது. அந்த இரண்டு வீடுகள் பொறுத்து வழக்கு நடந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த இரண்டு வீடுகளும் 1 ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியமா என்றால் இல்லை. நான் பஜனைகோயில் வீதியில் குடியிருக்கிறேன். 1 ம் பிரதிவாதி குன்னத்தூர் சாலையில் குடியிருக்கிறார். வாதி எத்தனை நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. 2 முதல் 4 பிரதிவாதிகள் எதற்காக வழக்கின் தரப்பினர்கள் என்றால் அவர்களும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பூபதியிடமிருந்து பணம் கொடுக்கல் வாங்கல் செய்துள்ளனர். அவர்கள் எவ்வளவு பணம் கொடுத்துள்ளனர், என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம எனக்கு தெரியாது. தாவா சொத்து பூபதியின் குடும்ப உறுப்பினர்களுக்கு பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளது தொடர்பாக நான் ஆவணங்கள் எதுவும் பார்த்தேனா என்றால் இல்லை. வாதி கிரய ஒப்பந்த பத்திரம் மற்றும் கால நீட்டிப்பு பத்திரம் ஆகியவற்றை மோசடியாக ஏற்படுத்திக கொண்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, 1 ம் பிரதிவாதி சொல்லி தான் தெரியும். சொத்துக்கள் பல கோடி மதிப்பு பெறும் என்பது தொடர்பாக ஏதாவது ஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை. சந்தை மதிப்பின் அடிப்படையில் சொன்னேன். அருகில் விற்பனையான நிலத்தின் அடிப்படையில் சொல்கிறேன். அந்த நிலம்தொடர்பான பத்திரம எதையும் நான் முன்னிலைபடுத்தவில்லை என்றால சரிதான். நான் தாவா சொத்து பல கோடி மதிப்பு பெறும் என சொல்லியுள்ளது தவறு என்றும், 1 ம் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல. எனக்கு பணப் பிரச்சினை பற்றி எதுவும் நேரடியாக தெரியாது என்றும் 1 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்த பத்திரம் மற்றும் கால நீட்டிப்பு பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது

என்ற விவரம் எனக்கு தெரியும். கிரய ஒப்பந்த பத்திரம் மற்றும் கால நீட்டிப்பு பத்திரங்கள் உண்மையான ஆவணங்கள் என்றும், அது பொய்யான ஆவணங்கள் இல்லை என்றும், 1 ம் பிரதிவாதிக்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (4 ம் பிரதிவாதி தரப்பில்)</u>**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. 1 ம் பிரதிவாதி அழைத்ததால் நான் சாட்சியம் அளிக்கிறேன். 1 ம் பிரதிவாதியின் முழுமையான சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து பற்றி எனக்கு தெரியும். என்ன தேதியில் என்ன பத்திரங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. 1 ம் பிரதிவாதி, அவரின் தந்தை மற்றும் சகோதரர் ஆகியோர் பொது அதிகார முகவர் மூலம் 3 மற்றும் 4 பிரதவாதிகளுக்கு சொத்தை கிரயம கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி அவரது பங்கை பொறுத்து 4 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி சொத்தில் வீடு கட்டி ஆழ்துளை கிணறு அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. குன்னத்துர் சாலையிலிருந்து அந்த வீட்டிற்கு காவேரி குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை அமைப்பும் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், 1 ம் பிரதிவாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.08.05 18:32:12 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS